4th August 1966]

(இ) ஆறு மாத தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டார்.

(உ) ஆம். தற்காலிக வேலை நீக்க காலம் முடிந்த பின்னர் 26—2—1966-ல் அவர் வேலையில் மீண்டும் சேர்த்துக்கொள்ளப் பட்டார்.

(எ) அவரிடமிருந்து அரசாங்கத்திற்குத் தொகை எதுவும் சேரவேண்டியதில்லை.

திரு. நா. இராசாங்கம் : தலைவரவர்களே, இந்த மணியக்காரர் சர்க்காருக்குச் சேரவேண்டிய தொகையைக் கட்டிய பிறகு மறுபடியும் வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப்பட்டாரா அல்லது கட்டவேண்டும் என்று சொல்லி வேலைக்குச் சேர்த்துக்கொள்ளப் பட்டாரா ?

கனம் திரு. வெ. ராமையா : நான் பதிலில் அவர் கையாடல் செய்யவில்லை என்று சொல்லியிருக்கிறேன். ஆகவே, அவர் திருப்பிக் கட்டவேண்டிய நிலைமை இல்லை.

Food articles without valid permits

* 85 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that consignments of more than five hundred bags of wheat without valid permit were seized by the Vigilance Cell of the C.I.D. Police at the Coimbatore Railway Goods Shed; and

(*b*) if so, the details thereof ?

The Hon. Sri V. RAMAIAH : (*a*) Yes.

(*b*) A consignment of 561 bags of indigenous wheat booked from Northern States without valid permit, was seized by the Vigilance Cell (C.I.D.) of Police at Coimbatore Railway goods yard on 16th December 1965 since the transport of wheat and its products in the statutory rationed area of Coimbatore with effect from 1st December without valid permit is an offence under Section 5 of the Madras Rationing Order 1965.

திரு. வை. சங்கரன் : இது யார் யாருக்கு அனுப்பப்பட்டது ? யார் யார் இந்த 'அஃபென்ஸ்' புரியக் காரணமாக இருந்தார்கள் ? அவர்களைக் கண்டு பிடித்து நடவடிக்கை எடுக்கப்பட்டதா ?

கனம் திரு. வெ. ராமையா : அந்த விவரம் என்னிடத்தில் இல்லை.

* 86 *Q.*—Sri V. SANKARAN : Will the Hon. the Minister for Food be pleased to state—

(*a*) whether it is a fact that more than 1,300 bags of toor dhall without permit were sezied by the C.I.D. in the Coimbatore Railway Goods Shed ; and

(*b*) if so, the details thereof ?

THE HON. SRI V. RAMAIAH: (a) Yes.

(b) The Municipal Town of Coimbatore being a rationed area and as the toor dhall has been declared as a rationed article, the consignments of toor dhall moved without permits were seized at Coimbatore. On a representation from the Merchants Association, the Government relaxed the restriction on the movement of toor dhall, and the toor dhall which was seized for want of permit, was released to the Merchants.

திரு. வை. சங்கரன்: சட்டத்திற்கு விரோதமாக இந்த 'அஃபென்ஸ்' புரிந்தவர்கள் யார் யார்? அவர்களைக் கண்டு பிடித்து தண்டனை கொடுக்கப்பட்டதா?

கனம் திரு. வெ. ராமைய்யா: இதிலே தண்டனை கொடுக்கக் கூடிய நிலைமை எதுவும் இல்லை. டூர் டால் போக்குவரத்தைப் பொருத்தவரை தடை விதிக்க வேண்டாமென்று மத்திய அரசாங்கம் கேட்டுக் கொண்டது. அதன் பேரில் பறிமுதல் செய்யப்பட்ட துவரம் பருப்பு அவர்களிடமே திருப்பிக் கொடுக் கப்பட்டு விட்டது.

தமிழ் நாடு கூட்டுறவு பாங்க்

* 87 கேள்வி—**திரு. இராம. அரங்கண்ணல்:** கனம் கூட்டுறவு-அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப் பாரா—

(அ) State Co-operative Bank டைரக்டர்கள் தேர்தல் சம்பந்தமான விதிகளில், 1965 நவம்பரில் கூட்டுறவு ரிஜிஸ்திரார் மாறுதல் செய்து உத்தரவிட்டாரா?

(இ) அந்த உத்தரவு 1965 டிசம்பரில் மாற்றப்பட்டுள்ளதா?

(உ) ஆமெனில், அதற்கான காரணங்கள் யாவை?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சக்கரை மன்றாடியார்: (அ) ஆம்.

(இ) ஆம்.

(உ) தனிப்பட்ட உறுப்பினர் எண்ணிக்கைக்கும் சங்க உறுப்பினர் எண்ணிக்கைக்கும் உள்ள விதாச்சாரத்தைக் குறைத்து கூட்டுறவுச் சங்கப் பதிவாளர் பிறப்பித்த ஆணையை அரசாங்கம் பரிசீலித்தது. மேற்சொன்ன விகிதாச்சாரம் இதுவரை இருந்தது போல் 2:15 ஆகவே தொடர்ந்து இருந்துவர வேண்டுமென்று அரசாங்கம் கருதியதால், கூட்டுறவுச் சங்கப் பதிவாளரின் ஆணையை அவ்வண்ணமே மாற்றியமைத்தது.

திரு. இராம. அரங்கண்ணல்: சார், இந்த ஸ்டேட் கோவாப்ப ரேடிவ் பாங்கு டைரக்டராக வருகிறவர்கள் மாவட்டங்களில் இருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட பாங் கிலும் பத்தாயிரத்திற்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஒரு பிரதி நிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டியிருக்கிறது. ஆனால் ஸ்டேட் கோவாப்பரேட்டிவ் பாங்கில் 110 பேர் உறுப்பினர்களாக இருந்து கொண்டிருக்கிறார்கள். அந்த 110 பேருக்கு இரண்டு பிரதிநிதிகள் எந்தக் காரணத்தால் கொடுக்கப்பட்டது என்று அறியலாமா?